விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 223வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 13 திங்கட்கிழமை (29.07.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## நாம் வெற்றியீட்ட சிங்களவர்களின்
## வாக்குகள் மட்டுமே போதுமானது ஆனால் அது எமது நோக்கமல்ல - அநுர

(காலி)

தனித்துப் பெரும்பான்மையினரின் வாக்குகளினால் மாத்திரம் வெற்றியீட்ட நாம் விரும்பவில்லை. மாறாக தமிழ், முஸ்லிம் மக்களின் ஆதரவையும் பெற்று ஐக்கிய அரசாங்கம் ஒன்றினை உருவாக்குவதே எமது திட்டம் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.



இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர், 11

## பெரமுன சார்பில் போட்டியிட எவ்வேளையிலும் நான் தயார்
### தம்மிக்க பெரேரா அதிரடி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு எந்த நேரத்திலும் தாம் தயாராக இருப்பதாகப் பாராளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா குறிப்பிட்டார்.



இது குறித்து அவர் 11

## ஜனாதிபதித் தேர்தலில்
# சமஷ்டித் தீர்வை முன்வைக்கும் வேட்பாளரை ஆதரிப்போம்
### சிறீதரன் எம்.பி தெரிவிப்பு

(கிளிநொச்சி)

தற்போதைய ஜனாதிபதி வேட்பாளர்களில் எவரேனும் சமஷ்டியை வலியுறுத்தி வடக்கு - கிழக்குத் தமிழர்கள் சுயாட்சியுடன் வாழ்வதற்கான ஏற்பாடுகளை தேர்தல் விஞ்ஞாபனத்தில் வலியுறுத்தினால், அவர்களுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் தமிழரசுக் கட்சி பரிசீலனை செய்யும் என அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார். (04ஆம் பக்கம் பார்க்க)



## மாடுகளைக் கடத்திய மூவர் அதிரடிக் கைது
### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா நெடுங்கேணிப் பகுதியிலிருந்து திருகோணமலை நோக்கி கப்ரக வாகனத்தில் கடத்திச் செல்லப்பட்ட 15 மாடுகளுடன் மூவர் வவுனியா விசேட அதிரடிப் படையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா விசேட அதிரடிப் படையின 11

## ஜனாதிபதித் தேர்தலில் ரணிலின் வெற்றி உறுதி!
### ரவி கருணாநாயக்க நம்பிக்கை

(கொழும்பு)

"ரணிலால் மாத்திரம்தான் இந்த நாட்டை முன்னேற்ற முடியும் என்பதை அவர் குறுகிய காலத்தில் நிரூபித்துக் காட்டியுள்ளார்.

எனவே, எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதியன்று நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ரணிலின் வெற்றி நிச்சயம்" என ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய செயலாளரும் 11

## பண்டத்தரிப்பு காந்திஜி சனசமூக நிலையத்தில் தீ

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பல்லசுட்டி காந்திஜி சனசமூக நிலையத்தின் கலை அரங்கம் திடீரெனத் தீப்பற்றியதில் பல இலட்சம் பெறுமதியான பொருட்கள் எரிந்து நாசமாகின.

குறித்த சம்பவம் நேற்று மதியம் ஒரு மணியளவில் நடைபெற்றது. திடீரென கலையரங்கம் தீப்பற்றி எரிவதைக் கண்ட பொதுமக்கள் தீயைக் கட்டுப்படுத்திய போதிலும் முன்பள்ளி சிறார்களின் கற்றல் உபகரணங்கள் 11

## 42 இந்திய மீனவர்களின் வழக்குகள் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 42 இந்திய மீனவர்களின் வழக்குகள் இன்று திங்கட்கிழமை ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களின் வழக்குகளே இவ்வாறு விசாரணைக்கு வருகின்றன. 11

## கடமையை மறந்த பொலிஸாருக்கு இடமாற்றம்
### யாழ்.மாவட்ட எஸ்.எஸ்.பி அதிரடி

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமைகளை செய்யத் தவறிய குற்றச்சாட்டில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் தமது கடமைகளை உரிய முறையில் செய்யத் தவறிய இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பில் யாழ்.மாவட்ட 11

### பொலிஸ்மா அதிபரின் பதவி நீக்கம்
## உயர் நீதிமன்றிடம் வியாக்கியானம் கோருவதற்கு ஜனாதிபதி தீர்மானம்

(கொழும்பு)

அரசியலமைப்புப் பேரவை அனுமதி வழங்கிய ஒருவரை நீக்குவதற்கு உயர் நீதிமன்றத்திற்கு அரசமைப்பின் கீழ் அதிகாரம் உள்ளதா? என்பது குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானத்தை கோருவதற்குத் தீர்மானித்துள்ளார்.

வாக்கெடுப்பின்போது அரசியலமைப்புப் பேரவையின் உறுப்பினர் ஒருவர் வாக்களிக்காவிட்டால் அல்லது வாக்களிப்பில் கலந்து கொள்ளாவிட்டால் அதனை ஆதரவாகக் கருதலாமா? அல்லது எதிர்ப் 11

## யாழ்.பண்ணைப் பகுதியில் மோ.சைக்கிளில் சாகசம்
## இளைஞர்கள் கைது


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் போக்குவரத்துக்கு இடையூறாக மோட்டார் சைக்கிள் ஓட்டியவர்கள், மது போதையில் வாகனம் செலுத்தியவர்கள், போக்குவரத்து விதிமுறைகள் மீறி வாகனம் செலுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டில் இளைஞர்கள் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பண்ணைப் பகுதியில் 04

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
17 - 05 - 1975

மறைவு
27 - 07 - 2024

## திரு. சீனிவாசகம் தயாபரன்(தயா)

கோட்டைக்காடு, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் லண்டன் வெம்பிலியை வசிப்பிடமாகவும் கொண்ட சீனிவாசகம் தயாபரன் அவர்கள் 27.07.2024 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு, திருமதி சீனிவாசகம் - தங்கமலர் தம்பதிகளின் பாசமிகு மகனும் திரு, திருமதி சங்கரலிங்கம் - செல்வநாயகி தம்பதிகளின் அன்பு மருமகனும் சர்மிளாவின் அன்புக் கணவரும் லிதுஷா, மானுஷா, ஆகியோரின் தந்தையாரும் விக்னேஸ்வரன், லிங்கேஸ்வரன், யாகுலன்(சுவிஸ்), யாதவன் மற்றும் காலஞ்சென்றவர்களான ரவீந்திரன், ஜெயாகரன், பதீஸ்வரன், சுதேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் மற்றும் சஜீபனின் (சுவிஸ்) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.07.2024) செவ்வாய்க் கிழமை கோட்டைக்காடு மல்லாகத்திலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று காலை 10 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக மல்லாகம் காடுபிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
அ.சங்கரலிங்கம்
076 842 6297

கோட்டைக்காடு,
மல்லாகம்.

(1574)

# மரண அறிவித்தல்



தோற்றம்
1948 - 11 - 20

மறைவு
2024 - 07 - 28

## கணபதிப்பிள்ளை ஸ்ரீபஞ்சாட்சரம்
### (இளைப்பாறிய இலங்கை வங்கி முகாமையாளர்)

திக்கத்தைப் பிறப்பிடமாகவும் வல்வெட்டியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை ஸ்ரீபஞ்சாட்சரம் அவர்கள் நேற்று 28.07.2024 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கணபதிப்பிள்ளை - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் சிவபாக்கியம் அவர்களின் அன்புக் கணவரும் திரு.சிவகரன்(லண்டன்), திருமதி சிவரஞ்சினி சுசீந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 29.07.2024 திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 12.30 மணியளவில் தகனக்கிரியைக்காக வல்வெட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்

(206)

# மரண அறிவித்தல்

## கிட்டினன் அருமைத்துரை
### (இலங்கை போக்குவரத்து சபையின் சிரேஷ்ட பரிசோதகர், அகில இலங்கை சமாதான நீதவான்)



பிறப்பு 24.05.1950 இறப்பு 27.07.2024

தொண்டைமானாறு கெருடாவிலைப் பிறப்பிடமாகவும் அல்வாய் வடக்கு மகாத்மா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கிட்டினன் அருமைத்துரை அவர்கள் 27.07.2024 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிட்டினன் - லட்சுமி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் இராசாத்தியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தங்கரத்தினம், கிளிதுரை, தங்கதுரை மற்றும் அழகுதுரை, சுலோசனா, கிருஷ்ணகுமாரி, ஜெயராஜ், ஜெயதுரை, சூரியகலா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான மகேந்திரம், பொன்னம்பலம் மற்றும் இரத்தினம், கிருஷ்ணபகவான், நிர்மலாதேவி, கார்த்திகேஸ்வரி, ஆசா, மகேந்திராணி ஆகியோரின் மைத்துனரும் சிவனேஸ்வரன், பரிதினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பிரியந்தி, சந்தோஷ், ஜெனோஸ், தக்சிகன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 29.07.2024 திங்கட்கிழமை இன்று 10 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து மகாத்மா சனசமூக நிலையத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின் அங்கிருந்து தொண்டைமானாறு விவேகானந்தா சனசமூக நிலையத்திற்கு அஞ்சலிக்காக எடுத்துச் செல்லப்பட்டு சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(C-879)

# மரண அறிவித்தல்

## சங்கரப்பிள்ளை ஆனந்தம்
### (ஓய்வு பெற்ற யாழ் போதனா வைத்தியசாலையின் உதவி சுகாதார பணியாளர்)



பிறப்பு 1931.03.06 இறப்பு 2024.07.23

மல்லாகம் குளமங்காலைப் பிறப்பிடமாகவும் சென்பற்றிக்ஸ் இராஜேந்திரா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை ஆனந்தம் அவர்கள் (23.07.2024) செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோசேப்பு சவிரிமுத்து-ஞானப்பூ தம்பதியினரின் புதல்வியும் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை அவர்களின் மனைவியும், காலஞ்சென்ற பிரான்சிஸ் சேவியர் அதிபர் அவர்களின் சகோதரியும் காலஞ்சென்ற ராஜேஸ்வரி அவர்களின் மைத்துனியும், லதா (லண்டன்), வவா(லண்டன்), பாலா(ஜேர்மன்), சிறி, அனா(ஜேர்மன்), காலஞ்சென்ற ஜெயம் ஆகியோரின் அன்புத் தாயாரும் விங்கஸ் (லண்டன்), ரவி (பிரான்ஸ்), காலஞ்சென்ற றஜித்தா, கமலா, ஜேமணி, முரளி (ஜேர்மன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் , சுதாகர், சுதா, சுகன்யா(லண்டன்), தனுஷா(லண்டன்), தர்ஷினி(கொழும்பு), ஸ்ரெபானி ஸ்ரெபான் (ஜேர்மன்),றோய்(நெதர்லாண்ட்), கபில், விந்துஜா, ஜெனி(பிரான்ஸ்), கீர்த்திக்கா, யோசுவா(ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியும் சினோபா, தனிஷ்டன், சண், டயஸ், ஜெமிஸ்டன், இம்மானுவேல், ஆன், பிரியா, பிரேமினி, கபில், பிரதீபன், சாள்ஸ் றொபேர்ட் ஆகியோரின் பேர்த்தியும் வைஸ்ணவி, சைந்தவி, சஜன், வியன், ஆரோன் எயிற்றன், அர்வின், எய்றன், சியானா, றெவோன் றெசோன், எய்டன், ஆரோன், நோவா , லீனா, கபிரியேல், ஆரணி, ஜோய் ஸ்பைடன், றபேல், றினோஸ், வியோனா சேலோக், ஒவியன், இனியா ஆகியோரின் பூட்டியும் அனிற்றா அவர்களின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி 29.07.2024 இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அதன் பின் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
சிறி (மகன்) 077 812 2492

(1558)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்கள் மாத்திரமே ரணிலுக்கு வாக்களிப்பர்

## உதயங்க வீரதுங்க கூறுகிறார்

(கொழும்பு)

**ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிட்டால் தமிழர்கள் மாத்திரமே அவருக்கு வாக்களிப்பார்கள். அதுவும் எமக்கு சாதகமாகவே அமையும் என ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்தார்.**



கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

2022 ஆம் ஆண்டு நிபந்தனைகளின் அடிப்படையிலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்தோம்.

இந்த இரண்டு ஆண்டு காலப் பகுதியில் பொதுஜன பெரமுனவின் ஒத்துழைப்பை இந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பெற்றுக்கொள்ளும் நோக்கில் அவர் செயற்பட்டார்.

அரசாங்கத்தில் அமைச்சு பதவிகளை வகிப்பவர்கள் மாத்திரமே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்க வேண்டும் என்று குறிப்பிட்டுக் கொள்கிறார்கள்.

கட்சியின் உறுப்பினரை வேட்பாளராக களமிறக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் பெரும்பாலான உறுப்பினர்கள் உள்ளார்கள்.

இதற்கமைய பொதுஜன பெரமுனவின் உறுப்பினரை வேட்பாளராக களமிறக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (நி)

# 10 மாதங்களில் 488 கொலைகள்

## ஆய்வறிக்கை தகவல்

(கொழும்பு)

கடந்த 2023 ஆம் ஆண்டின் முதல் 10 மாதங்களில் அதிக கொலைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கடந்த ஆண்டில் 488 கொலைகள் நடந்துள்ளன. அவற்றில் 52 துப்பாக்கிச் சூடு காரணமாக நடந்தவை ஆகும்.

தங்காலை, நுகேகொடை, கம்பஹா, இரத்தினபுரி மற்றும் எல்பிட்டிய ஆகிய ஐந்து பொலிஸ் பிரிவுகளில் அதிகளவான கொலைகள் பதிவாகியுள்ளன. தங்காலை பிரதேசத்தில் மாத்திரம் 32 கொலைகள் பதிவாகியுள்ளன.

நாடு முழுவதும் 2018 ஆண்டு மற்றும் 2022 ஆண்டிக்கு இடையில் 7,017 படுகொலைகள் பதிவாகியுள்ளன.

இவ்வாறான வன்முறைக் குற்றச் சம்பவங்கள் அதிகரித்து வருவதைத் தடுக்க போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று ஆய்வு அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

ஏனைய ஆண்டுகளை விட கடந்த ஆண்டில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கும் தடுப்பதற்கும் போதிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என இலங்கை பொலிஸ் பிரிவின் கணக்காய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# ரணிலுக்கு ஆதரவளிக்க தயாராகும் 102 மொட்டு எம்.பிகள்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆளும் கட்சி அமைச்சர்கள் உட்பட சுமார் 102 பேர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது தொடர்பில் அவர்கள் இதற்கு முன்னதாக ஜனாதிபதியுடன் கருத்துக்களைப் பரிமாறி வருவதாக கூறப்படுகிறது.

ஜனாதிபதி தலைமையிலான பொதுக்கூட்டத்தில் ஏறக்குறைய அறுபது பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏற்கனவே தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உத்தியோகபூர்வ தீர்மானத்தின் அடிப்படையில் தமது தனிப்பட்ட தீர்மானங்களை எடுக்க அவர்கள் தயாராக உள்ளதாகவும் ஏனைய உறுப்பினர்களும் தயாராக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பொதுஜன பெரமுன தனி வேட்பாளரை நிறுத்த முடிவு செய்தாலும் குறித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தற்போதைய ஜனாதிபதிக்கே ஆதரவளிக்க தயாராக உள்ளதாக பகிரங்கமாக அறிவித்துள்ளனர்.



பொதுஜன பெரமுனவின் ஆளும் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் நூற்றி இருபது எம்.பி.க்களில் இருபதுக்கும் குறைவான எம்.பி.க்கள் அக்கட்சியின் கருத்தை ஏற்றுக் கொண்டுள்ளதாகவும்,

அக்குழுவில் இருந்து பெரும்பாலானவர்கள் தனிப்பட்ட தீர்மானங்களை மேற்கொள்வதாகவும் தெரியவருகிறது. (நி)

## 17 வயதிற்குள்

# நிறைவுக்கு வரும் பாடசாலைக் கல்வி

## கல்வி அமைச்சு திட்டம்

(கொழும்பு)

2025 ஆம் ஆண்டின் முதல் தவணை முதல் நடை முறைப்படுத்தப்படவுள்ள கல்வி சீர்திருத்த முன்மொழிவுகளின் படி, பாடசாலையின் தரங்களின் எண்ணிக்கை 13 இல் இருந்து 12 ஆக குறைக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

அதன் படி, ஒவ்வொரு மாணவர்களும் 17 வயதிற்குள் பாடசாலை கல்வியை முடிக்க வேண்டும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், புதிய சீர்திருத்தத்தின் மூலம் தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்கள் படிப்படியாக கட்டாயமாக்க முன்மொழியப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதேவேளை, புதிய சீர்திருத்தத்தின் கீழ், தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைகளுக்கு குறிப்பிட்ட சத வீத புள்ளிகளையும் வழங்கி பரீட்சையை இலகுபடுத்தவும் போட்டியை குறைக்கவும் முன்மொழியப்பட்டுள்ளது.

மேலும், சாதாரண தர பரீட்சைக்கான பாடங்களும் 9 இல் இருந்து 7 ஆக குறைக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# இலங்கைக்கு படையெடுக்கும் வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான திட்டமிடல் தொடர்பில் ஆரம்ப ஆய்வுகளை மேற்கொள்வதற்காக பொது நலவாய அமைப்பின் சர்வதேச தேர்தல் கண் காணிப்புக் குழுவொன்று இலங்கை வந்துள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இவ்வாறு வந்த அவர்கள் பவ்ரல் அமைப்பின் அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடிய நிலையில், ஜனாதிபதித் தேர்தல் கூடுபிடித்துள்ள தற்போதைய அரசியல் சூழ்நிலைகள் குறித்து அவர்கள் பிரதிநிதித்துவப் படுத்தும் வெளிநாட்டு மையத்திற்கு அறிக்கை அனுப்ப உள்ளனர்.

இதேவேளை மேலும் மூன்று சர்வதேச தேர்தல் கண்காணிப்பு குழுக்களும் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளதாக ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தயாராக உள்ள மூன்று அரசியல் கட்சிகள் பவ்ரல் அமைப்பினால் தயாரிக்கப்பட்ட விஞ்ஞாபனத்தை ஏற்றுக்கொண்டு அதில் கூறப்பட்டுள்ளபடி செயற்படுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக ரோஹன ஹெட்டியாராச்சி குறிப்பிட்டார்.


சேவை நலன் பாராட்டு

திரு. நிற்சிங்கம் தயானந்தன்

சேவை விபரம்

யா/நல்லூர் சி.சி.த.க பாடசாலை
05.08.1998–01.12.2009
யா/சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம்
02.12.2009–30.04.2015
நல்லூர் கோட்டக் கல்வி அலுவலகம்
01.05.2015–01.01.2020
யாழ்ப்பாண வலயக்கல்வி அலுவலகம்
02.01.2020–30.07.2024




இருபத்தாறு ஆண்டுகள் நிறைவான நீள் சேவைக்கும் மகிழ்வான ஓய்வுக்கும் மனதார வாழ்த்துகின்றோம்.

(சி–867)

யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலக நலன்புரிச்சங்கம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த சுற்றுக்கு முன்னேறினார் இந்திய டேபிள் டென்னிஸ் வீராங்கனை



பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் ஒலிம்பிக் போட்டிகள் தொடக்க விழா கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்த அணிவகுப்பில் மொத்தம் 200 இற்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த பல ஆயிரக்கணக்கான வீரர், வீராங்கனைகள் பங்கேற்றனர்.

டேபிள் டென்னிஸ் பிரிவின் பெண்கள் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் ஸ்ரீஜா அகுளா, சுவீடன் வீராங்கனை கிறிஸ்டினாவுடன் மோதினார்.

இதில் அகுளா 4-0 என்ற புள்ளிக்கணக்கில் வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார். (நி)

## யாழ்.பண்ணைப்...

விடுமுறை நாளான ஞாயிற்றுக் கிழமைகளில் பெருமளவானவர்கள் நடைப் பயிற்சி செய்வதற்கும், குழந்தைகள், சிறுவர்களுடன் கடற்கரையில் பொழுதைப் போக்கவும் கூடுவது வழமை.

அவ்வாறான நேரங்களில் இளைஞர் குழுக்கள் பெரிய சத்தங்களுடன் மோட்டார் சைக்கிள் ஓடுதல், வீதியில் ஆபத்தை விளைவிக்கும் விதமாக மோட்டார் சைக்கிள்களைச் செலுத்துதல் என மோட்டார் சைக்கிள்களில் பல்வேறு சாகசங்கள் செய்து மக்களுக்கு இடையூறு விளைவித்து வந்தனர்.

இந்நிலையில் அது தொடர்பில் யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சூரிய பண்டாரவின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டதை அடுத்து, போக்குவரத்துப் பொலிஸார் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை பண்ணைப் பகுதியில் விசேட கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

அதன்போது மோட்டார் சைக்கிளை ஆபத்து விளைவிக்கும் வகையாகச் செலுத்தியமை, போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை, மது போதையில் வாகனம் செலுத்தியமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களில் அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன் அவர்களின் மோட்டார் சைக்கிள்களையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களையும் அவர்களின் மோட்டார் சைக்கிள்களையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ள பொலிஸார், நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளனர். (ந-7,33)

## சமஷ்டித்...

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கொண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 10, 11 ஆம் திகதிகளில் மத்திய குழு கூடி தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிப்பதா? அல்லது சமஷ்டியை வலியுறுத்தும் வேட்பாளரை ஆதரிப்பதா? என்பது குறித்து இறுதி முடிவு எட்டப்படும் எனத் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் இதுவரை 12 பேர் போட்டியிடுவது உறுதியாகியுள்ள நிலையில், தமிழர் தரப்பில் பொது வேட்பாளர் ஒருவரை நியமிப்பது தொடர்பில் தமிழரசுக் கட்சி, தமிழ் தேசிய மக்கள் முன்னணி தவிர்ந்த ஏனைய தமிழ்த் தேசிய அரசியற் கட்சிகள் தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் அதிக எண்ணிக்கையானோர் போட்டியிடுவதனால், எவராலும் தனித்துப் பெரும்பான்மையின மக்களின் வாக்குகளினால் அறுதிப் பெரும்பான்மையைப் பெறமுடியாது எனவும், எனவே இம்முறை தேர்தலில் தமிழர்களின் வாக்குகள் முக்கிய செல்வாக்கு செலுத்தும் என அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ந-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3181

### சந்துரு

கல்யாணம் ஆன புதுசில ராதா கரெக்டர் மாதிரி இருக்கும் மனைவிமார்கள்



இரண்டு மூன்று வருசம் கழிச்சு வடிவுக்கரசி கரெக்டர் மாதிரி மாறி விடுகிறார்கள்.

### சுவஸ்திகா

உங்க காலடியில கோடிக்கணக்கான பணம் இருக்கும்.. ஆனால் அதனால் உங்களுக்கு பிரயோசனமில்லை



ஆமாங்க ஐயா Bank மாடியில் தான் நான் வாடகைக்கு குடியிருக்கன்

### கீதா

வகுப்பறையில் முதல் வரிசையில் இருப்பவன் புத்தகத்தையும்



கடைசி வரிசையில் இருப்பவன் வாழ்க்கையையும் படிக்கிறான்

### றுக்ஷா

salary வந்திட்டு என்டு சந்தோசப்படுறதா?



இவ்வளவு தான் வந்துருக்கு என்று வருத்தப்படுறதா என்று புரியல

### பிரவின்

உயர உயரத்தான் நமக்கு மேல் எத்தனை பேர் உள்ளனர் என்பது புரியும்



உயர்ந்து விட்டோம் என்று ஒருபோதும் எண்ணி விடாதே

### சஸ்வின்

வீட்டில ஒரு குழந்தை இருந்தால் நீங்கள் பிரி



அதுக்கு மேல இருந்தால் அவங்களுக்கு நீங்க ரெப்ரி

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் வரலாற்றை சிதைக்க தென்னிலங்கை திட்டம்-செல்வம் எம்.பி

(மன்னார்)

வடக்கு - கிழக்கில் தமிழர்கள் பூர்வீகமாக வாழ்ந்தார்கள் என்கின்ற வரலாற்றை சிதைக்கும் வகையில் இன்று தென்னிலங்கை திட்டமிட்டு பல விடயங்களை அரங்கேற்றி வருவதாக வவுனியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

வெலிக்கடை சிறைச்சாலை படுகொலையின் 41 ஆவது நினைவேந்தல் நிகழ்வு மன்னாரில் தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ கட்சியின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துக் கொண்டு உரையாற்றிய செல்வம் அடைக்கலநாதன் எமது ஒற்றுமை இன்மை காரணமாக எமது மக்களையும் மண்ணையும் நாம் இழந்து விடக்கூடாது.

மேலும் ஓர் இன அழிப்பின் ஆரம்ப இடம் வெலிக்கடை சிறைச்சாலை எனவும் ஒரு இனத்தின் மீது வன்முறைகள் ஆரம்பிக்கப்படுவது தான் இலங்கை வரலாற்றில் கூறப்படுகின்ற மிக மோசமான வன்முறையாகும்.

1983 ஆம் ஆண்டு இளைஞர் யுவதிகள் தமது உயிரை எமது தேசத்திற்காக தியாகம் செய்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டு மீண்டும் அகிம்சை ரீதியான போராட்டங்களினூடாக எமது இனத்தின் பிரச்சினைகளை வெளிக் கொண்டு வரும் கால கட்டத்தில் தாம் உள்ளோம்.

அத்துடன் எமது மக்களின் நிலங்கள், கடல் வளம், மண் அபகரிக்கப்படுவதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மேலும் எமது ஒன்றுமை இன்மையால் தென்னிலங்கையில் உள்ளவர்கள் வடக்கு, கிழக்கில் ஆட்சி நடத்தக்கூடிய அல்லது அவர்களின் செயல்பாட்டை இங்கு திறம்பட செயற்படுத்தக்கூடிய வாய்ப்பை வழங்கி வரும் நிலைப்பாட்டிலேயே தாம் இருந்து வருவதாக தெரிவித்துள்ளார்.

எனவே அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து மக்களின் விடுதலைக்காகவும் மக்கள் விரும்புகின்ற ஒற்றுமையை பேணி மக்களுக்காக குரல் கொடுக்கும் எமது மண்ணை மீட்டெடுக்கும் தார்மீக செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (நி)

# நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் போராடுகின்றோம்

## காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம்

(மன்னார்)

நாட்டில் தெரிவு செய்யப்படுகின்ற ஒவ்வொரு ஜனாதிபதியிடமும் காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளுக்கான நீதியை கேட்டுக் கொண்டே இருக்கிறோம். இதுவரை எவ்வித தீர்வும் கிடைக்கவில்லை என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கத்தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கம் நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை 11 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது கருத்து தெரிவிக்கையில் மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச் சந்திரா இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாங்கள் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக வீதியில் நின்று போராடி வருகிறோம்.

ஆனால் எங்களை ஒரு வருமே திரும்பி பார்ப்பதாக தெரியவில்லை. எனினும் எங்களுக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் வீதியில் இறங்கி போராடி வருகிறோம். ஆனால் நீதிக்காக ஏங்கி போராடி வருகின்ற அம்மாக்கள் இறந்து கொண்டிருக்கிறார்கள். இதனால் சாட்சிகளும் மறைக்கப்பட்டு கொண்டு செல்கிறது. அதனையே இந்த அரசும் விரும்புகின்றது. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகத்தை மாவட்ட ரீதியாக ஸ்தாபித்துள்ளனர். காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளுக்கு 2 லட்சம் ரூபாய் கொடுப்பதாக கூறுகின்றனர். எமது உறவுகள் இல்லை என்பதை உறுதிப்படுத்த அரசு இந்த பணத்தை வழங்குகின்றது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் ஊடாக உண்மையை கண்டறிவோம் என கூறப்பட்டுள்ள போதும் இது வரை உண்மையை கண்டறிய முன் வரவில்லை. ஆனால் இழப்பீடு வழங்குவதற்காக மாத்திரம் முன்னுக்கு வருகின்றனர்.

நாங்கள் நஷ்டஈட்டை பெற்றுக் கொண்டு வீட்டில் இருக்க வேண்டும் என்பதே ஓ.எம்.பியின் நோக்கமாக உள்ளது. எமது பிள்ளையின் உயிர் 2 லட்சம் பெறுமதி இல்லை. எங்கள் பிள்ளைகளை திருப்பி தந்தால் 4 லட்சம் எங்களால் தர முடியும். உயிருடன் ஒப்படைத்த பிள்ளைகளையே கேட்கிறோம். தற்போது ஜனாதிபதி தேர்தல் இடம்பெற உள்ளது.

காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளுக்கு தற்போதைய ஜனாதிபதியினால் தீர்வு தர முடியுமா?, நாட்டில் தெரிவு செய்யப்படுகின்ற ஒவ்வொரு ஜனாதிபதியிடமும் காணாமல் போன எம் உறவுகளுக்கான நீதியை கேட்டுக் கொண்டே இருக்கிறோம். நேரடியாக சென்று சந்தித்து கலந்துரையாடியும் உள்ளோம்.

ஆனால் இதுவரையில் எந்த ஜனாதிபதியும் எமக்கான பதிலை வழங்கவில்லை.

இலங்கை அரசியலில் நம்பிக்கை இல்லை. இவ்வாறான காரணங்களினாலேயே சர்வதேச விசாரணை கோரி போராட்டம் முன்னெடுத்து வருகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-285)


லங்கா மஹால் (PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
0091956615 6719

WESTERN UNION · MoneyGram · Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974


# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் இந்து நாகரிகப் பாட ஆசிரியர் திருமதி. கௌசல்யா காந்தரூபன் அவர்களின் அன்புத் தந்தை

அமரர். **இளையதம்பி நடேசன்**



அவர்கள் 27.07.2024 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம் (575)

ஆசிரியர், அதிபர் நலன்புரிச் சங்கம்,
யா/இணுவில் மத்திய கல்லூரி.

# இராசிபலன்

29.07.2024
ஆடி 13, திங்கட்கிழமை,
நவமி முன்னிரவு 9.18 மணிவரை

பரணி பிற்பகல் 2.47 மணிவரை
சுபநேரம் 12.03-1.33 மணிவரை
இராகுகாலம் 7.33-9.03 மணிவரை

கார்த்திகை விரதம்
சந்திராஷ்டமம் - பூரம், உத்தரம்

வளவன்



**மேஷம்** - குடும்பத்தினர் உங்களின் முயற்சிகளுக்கு பக்கபலமாக இருப்பர், திட்டமிட்ட காரியங்களில் சில மாற்றங்கள் ஏற்படலாம், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம்.



**கடகம்** - கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம் பெறலாம், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பாராட்டும் புகழும் கூடும் நாள்.



**துலாம்** - பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.



**மகரம்** - வரவேண்டிய பணவரவுகள் வந்து சேரலாம், சுபகாரியங்களில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.



**ரிஷபம்** - சிந்தித்துச் செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச் சொல்லுக்கு ஆட்பட நேரிடலாம்.



**சிம்மம்** - எதிர்ப்புகள் அகன்று வியாபார விருத்தி ஏற்படும், மறதியால் விட்டுப் போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.



**விருச்சிகம்** - பணத்தேவைகள் பூர்த்தியாகும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இல்லத்தில் இடம்பெறலாம்.



**கும்பம்** - எதற்காகவும் பிடிவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது, தன்னம்பிக்கையும் துணிவும் அதிகரிக்கும் நாள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.



**மிதுனம்** - வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், இல்லம் தேடிய இனிய செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.



**கன்னி** - தொழிலில் அதிகாரிகளை விமர்சிப்பது நல்லது, ஒரு வகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் விரயமாகலாம், பொது நலனில் ஈடுபடும் போது மற்றவர்கள் அதிருப்திக்கு ஆட்படலாம்.



**தனுசு** - எதிர்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறும் நாள், உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும்.



**மீனம்** - பொதுநலனில் அதிக ஈடுபாடு காட்டுவீர்கள், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், வாக்கு மேன்மையுண்டு, தனவரவு திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**ஆயிரம் உபதேசங்களை விட ஒரு அனுபவம் நல்ல பாடம் கற்பிக்கும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவக கல்வி தராதரத்தை மேம்படுத்த நடவடிக்கை

## அமைச்சர் டக்ளஸ் துறைசார் அதிகாரிகளுடன் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தீவக பிரதேச கல்வித்துறையில் காணப்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கும் அப்பகுதியின் கல்வி தரத்தை மேம்படுத்துவது தொடர்பிலும் துறைசார் அதிகாரிகளுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விசேட கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டார்.

யாழ்.மாவட்டத்தின் தீவகக் கல்வி வலய பாடசாலைகளில் பல்வேறு பிரச்சினைகள் மற்றும் ஆளணி பற்றாக்குறை நிர்வாகப் பிரச்சினைகள் காணப்படுவதாகவும் மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்துவதில் இவ்வாறான காரணிகள் பல தாக்கங்களை ஏற்படுத்துவதாகவும் பலதரப்பட்டவர்களாலும் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது.

இந்நிலையிலேயே குறித்த கலந்துரையாடல் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள அமைச்சரின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது தீவகப்பிரதேசத்தில் காணப்படும் பிரச்சினைகள் குறித்தும் அவற்றுக்கு தீர்வு காண்பதற்கான ஏதுநிலைகள் குறித்து இருதரப்பினரும் இதன் போது விரிவாக ஆராய்ந்திருந்தனர்.

இந்நிலையில் தீவகக் கல்வி வலயங்களுக்கு உட்பட்ட பாடசாலைகளில் கல்வித்தர நிலையை மேம்படுத்தி மாணவர்களுக்கு சிறந்ததோர் கல்விச் சேவையை பெற்றுக்கொடுக்க முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

குறிப்பாக தீவக கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் தற்போது கல்வி நிலை வீழ்ச்சி அடைந்துள்ளதை புள்ளிவிபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இந்நிலையில் அது தொடர்பில் துறைசார் அதிகாரிகளுடன் விசேடமாக ஆராய்ந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கல்வி நிலைகளை மேம்படுத்தும் நோக்கில் துறைசார் கல்வி நிலை அதிகாரிகாரிகளுக்கு பல்வேறு ஆலோசனைகளையும் எடுத்துக் கூறியிருந்தார். அத்துடன் கல்வித்துறையில் இருக்கக்கூடிய குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஏதுநிலைகள் குறித்து துறைசார் அமைச்சின் கவனத்திற்கு கொண்டு சென்று தீர்வுகளை காண்பதற்கும் நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் இதன்போது தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## அறநெறி மாணவர்களிற்கான திருக்குறள் போட்டி

(யாழ்ப்பாணம்)

இந்து ஆன்மிகப் பிரசாரகர் முன்னெடுக்கும் திருக்குறள் போட்டிகள் செப்டெம்பர் மாத அளவில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்காக அறநெறி மாணவர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வடகிழக்கு மாகாணங்களிலுள்ள 8 மாவட்டங்களுடன் கண்டி, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் உள்ள அறநெறிகளும் விண்ணப்பிக்க முடியும்.

இப்போட்டியில் தரம் 1 தொடக்கம் உயர்தரம் வரையுள்ள மாணவர்களை உள்ளடக்கிய 5 பிரிவுகளில் இப்போட்டிகள் இடம்பெறவுள்ளன. பதிவுகள் 15.08.2024 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பங்களை வட்சப் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் பிராந்திய அலுவலகம், குருகுலம், பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்க முடியும் என இந்து ஆன்மீகப் பிரசாரகர் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார். (நி)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(கரணவாய்)

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க நிர்வாகத் தெரிவும் வருடாந்த பொதுக்கூட்டமும் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி பிற்பகல் 4.30 மணியளவில் பாடசாலை பொது மண்டபத்தில் பாடசாலையின் அதிபர் விஜயராஜா இளையராஜா தலைமையில் நடைபெறும். (நி-60)

## மஹோற்சவம்


(யாழ்ப்பாணம்)

ஈழத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினெட்டுத் தினங்கள் உற்சவங்கள் நடைபெறவுள்ளன.

ஒகஸ்ட் 15 ஆம் திகதி வியாழக்கிழமை சப்பறத்திருவிழாவும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை வேட்டைத்திருவிழாவும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் அதனைத் தொடர்ந்து மறுநாள் 28 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது என தேவஸ்தான பிரதம குரு ஸ்ரீ விஷ்ணுஸ்ரீ க.ச.சோமஸ்கந்தாச்சார்யார் அறிவித்துள்ளார். (நி)

# அவசர சிகிச்சைப் பிரிவு அடுத்த வாரம் ஆரம்பம்

## சாவ.வைத்தியசாலை அத்தியட்சகர் தெரிவிப்பு




(சாவகச்சேரி)

அடுத்த வாரம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைப் பிரிவு, விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு ஆகியன திறக்கப்படவிருப்பதாக வைத்திய அத்தியட்சகர் ரஜீவ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு, சத்திர சிகிட்சைக்கூடம் ஆகியவற்றை இயக்க ஆளணி மற்றும் மின்சாரம் தடைப்படும் வேளையில் மாற்றீடான மின்பிறப்பாக்கி ஆகியன அவசியமானதாக காணப்பட்டன. தற்போது 400 கிலோ வாற்ஸ் வலுவுடைய நிரந்தர மின்பிறப்பாக்கி கிடைக்கப்பெற்றுள்ளது. அதே வேளை ஒருசில ஆளணிப் பற்றாக்குறையும் அடுத்த வாரம் அளவில் நிரப்பப்படும். எனவே அடுத்த வார நடுப்பகுதியில் புதிய அலகுகளை இயக்க உத்தேசித்துள்ளோம்.

அதேவேளை வெளிநோயாளர் பிரிவு மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு ஆகியன மீண்டும் வைத்தியசாலையின் முன் பகுதிக்கு மாற்றப்படவிருப்பதாக மேலும் அவர் தெரிவித்திருந்தார். (நி-6-30)



நெல்லியடி பொலிஸ் நிலையத்துக்கு பொறுப்பதிகாரியாக J.கேமந்தரோகான் நியமிக்கப்பட்டுள்ளார். பிரதம குருக்களின் ஆசி பெற்று நேற்று ஞாயிற்றுக்கிழமை தனது கடமைகளை பொறுப்பேற்றுள்ளார். (படம்: மகாலிங்கம்)

## கஞ்சா கடத்தியவர் டிப்பருடன் கைது



(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் இருந்து டிப்பர் வாகனத்தில் கஞ்சா போதைப்பொருளை கடத்தி சென்ற நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்று முன்தினம் சனிக்கிழமை கிளிநொச்சி பூநகரிப் பகுதியை நோக்கி பயணித்த டிப்பர் வாகனத்தினை சங்குப்பிட்டி பாலத்துக்கு அருகில் பொலிஸார் வழிமறித்து சோதனையிட்டனர்.

அதன் போது டிப்பர் வாகனத்தினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 20 கிலோ 485 கிராம் கஞ்சா போதைப் பொருளை பொலிஸார் மீட்டனர்.

அதனை அடுத்து டிப்பர் வாகன சாரதியை பொலிஸார் கைது செய்தனர்.

கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட டிப்பர் வாகனம் மீட்கப்பட்ட கஞ்சா போதைப்பொருள் மற்றும் கைது செய்யப்பட்ட நபரை மேலதிக சட்ட நடவடிக்கைக்காக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளனர். (நி-30-33)

## தொழிற்பயிற்சிகளுக்கான விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையினால் பாடசாலையை விட்டு விலகியவர்கள் மேற்படிப்புக்களை தொடர முடியாதவர்கள் மற்றும் வேலை வாய்ப்புக்கள் இன்றி இருப்பவர்களிற்கு உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் உள்ள தொழில்எழுவாய்ப்பினை அடிப்படையாகக் கொண்டு யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் தொழிற்பயிற்சி கற்கைநெறி கள் நடத்தப்பட்டு வருகின்றது.

2024 ஆம் ஆண்டு இரண்டாம் அரையாண்டிற்கான முழுநேர கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இக்கற்கை நெறிகள் யாழ்.மாவட்டத்தில் கைதடி, காரைநகர், வல்வெட்டித்துறை, பண்டத்தரிப்பு, சுன்னாகம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய தொழிற்பயிற்சி நிலையங்களிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை, பூநகரி, பழைய கச்சேரி, பளை மற்றும் கிளிநொச்சி ஆகிய தொழிற்பயிற்சி நிலையங்களிலும் நடைபெறுகின்றன.

இக்கற்கை நெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை மட்டம்-4(NVQ-4) சான்றுதழுக்கான முழுநேர பயிற்சி நெறிகளாகும்.

கற்க விரும்புவர்கள் தங்கள் பதிவுகளை நாளை மறுதினம் புதன்கிழமைக்கு முன்னர் மாவட்ட அலுவலகம் 4 ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம், இல. 12, கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம் அல்லது மாவட்ட அலுவலகம், 155 ஆம் கட்டை, கிளிநொச்சி அல்லது அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களிலும் மேற்கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்வதற்கு 02 222 7949, 021 228 5686, 071 031 8737, 077 613 9307 தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என தொழிற்பயிற்சி அதிகாரசபை பிரதிப்பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் 97 ஆவது வருடத்தை முன்னிட்டு பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் நடைபயணம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. கிளிநொச்சி மத்திய கல்லூரி முன்பாக ஆரம்பித்த நடைபயணம் கிளிநொச்சி மகா வித்தியாலயம் வரை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த நடை பயணத்தில் கல்லூரியின் முன்னைநாள் அதிபரும் பாராளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் உட்பட பாடசாலையின் முன்னைநாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

(படங்கள்- தேவானந்தன்)

## ஆனைவிழுந்தான்,வன்னேரிக்குளம் பகுதியில்
# யானைகளின் நடமாட்டம் அதிகரிப்பு
## அச்சத்தில் மக்கள்

(அக்கராயன்)

கிளிநொச்சி வன்னேரிக் குளம், ஆனைவிழுந்தான் குளம் ஆகிய இரு கிராமங்களின் மக்களும் யானைகளின் தொல்லைகளை எதிர்கொண்டுள்ளனர்.

வன்னேரிக் குளத்தில் இருந்து அக்கராயன் வரையான வீதியின் இரு புறமும் காடுகள் உள்ளதால் சுலபமாக யானைகள் வீதிக்கு வருகின்றன.

இதன் காரணமாக இரவு வேளையில் அக்கராயன் பிரதேச வைத்தியசாலைக்கு வருவதற்கு கூட யானை களின் அச்சுறுத்தல் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு துணுக்காயின் அம்பலப்பெருமாள் குளம், கோட்டைகட்டியகுளம் ஆகிய கிராமங்களில் யானை வேலிகள் அமைக்கப்பட்டிருப்பதன் காரணமாக காடுகளில் இருந்து யானைகள் வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் குளம் கிராமங்களை நோக்கி கூடுதலாக வருகை தருவதாக மக்களினால் தெரிவிக்கப்படுகின்றது. (நி-350)

# பாடசாலைக்கு கஞ்சாவுடன் சென்ற மாணவன்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கள்ளப்பாட்டில் அமைந்துள்ள பாடசாலைக்கு மாணவன் ஒருவன் கஞ்சாவுடன் சென்ற சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு கள்ளப்பாட்டில் அமைந்துள்ள பாடசாலைக்கு தரம் 8 ஆம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவன் ஒருவர் தனது வீட்டில் இருந்து பாடசாலைக்கு செல்லும் போது சிறு கஞ்சா பொதி ஒன்றினை பாடசாலைக்கு கொண்டு சென்றிருந்தான். இதனை அவதானித்த சக நண்பன் பாடசாலை அதிபரிடம் தகவலை தெரிவித்திருந்தான்.

இது தொடர்பாக குறித்த மாணவனிடம் விசாரணை மேற்கொண்ட பாடசாலை அதிபர் மாணவனை முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு பரிசோதனைக்காக அனுப்பி வைத்துள்ளார்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-299)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

## சத்திச் சாரணை

Botanical Name- Trianthema decandra
Family- Aizoaceae


தரைபடர் மூலிகையாகும். சமவெளிப் பகுதிகளில் மற்றும் மணல் பகுதிகளில் பரவி வளரக்கூடியது.

இதனுடைய இலைகள், தண்டு,வேர் அனைத்தும் மருத்துவ குணம் மிக்கவை. trianthemine எனும் முக்கியமான அல்கலொயிட்டு வேதியத்தின் பொருள் காணப்படுகிறது. இது மருத்துவ குணம் மிக்கது.

சிறுநீரக நோய்கள் என்றாலே சத்திச்சாரணைவேர் முக்கியமானது. கிரியத்தின், யூரியா போன்றவற்றின் அளவை இரத்தத்தில் சீராக பேணக்கூடியது. சிறுநீர் தாரையில் ஏற்படும் எரிச்சலையும் நீக்கக்கூடியது.

சிறுநீரகம் செயலற்று போவதை குறைக்கக் கூடியது. இதற்கு முற்றிய சத்திச் சாரணையின் வேரை சேகரித்து நன்கு கழவி வெட்டி, நிழலில் உலர்த்தி பொடித்து தினமும் 130 மி.கிராம் அளவு எடுத்து நாள் தோறும் 130 மி.கிராமால் அதிகரித்து 40 நாட்கள் எடுத்து 41 ஆம் நாளிலிருந்து தினமும் 130மி. கிராம் அளவு 80 நாட்கள் வரை வெந்நீரில எடுத்து வர சிறுநீரக கோளாறுகள் நீங்கும். பெண்களுக்கு ஏற்படும் வெள்ளை சாய்தல் நோயும் தீரும்.

அதே மூட்டுவியாதி கட்டும் சிறந்த மூலிகை வேராகும். அதேபோன்று சத்திச் சாரணை இலைகளை நன்கு கழுவி எடுத்து சாறு எடுத்து 20 மில்லி அளவு 40 மில்லி காய்ச்சிய பசுவின் பாலில் கலந்து எடுக்க கட்டுப்பட்ட சிறுநீரை உடனே இறக்கும்.



அதேபோன்று சாரணை வேரும் சுக்கும் சமஅளவு எடுத்து 4 பங்கு நீர் விட்டு 1/4 பங்காக வற்றக் குடிநீர் காய்ச்சி 60 மில்லி அளவு காலை, மாலை 3 நாட்கள் அருந்திவர சமிபாடின்மை, வயிற்றுப் பொருமல், வாய்வுக்கோளாறுகள் நீங்கும்.

சத்திச்சாரணையின் இலைச்சாறு 400மில்லி தேங்காய் எண்ணெய் 400மில்லி கலந்து அடுப்பேற்றி நீர்வற்றி மெழுகுபதம் வந்ததும் இறக்கி ஈரமில்லாத பொத்தலில் இட்டு வைத்துக் கொள்ளவும். மூட்டுக்களில் ஏற்படும் வலி, வீக்கத்திற்கு பூசிவர நன்கு குணமாகும். சாரணை இலையை தனியாகவோ ,துவரம் பருப்புடன் சேர்த்தோ கடைந்து வரத்தில் 3 நாட்கள் சாப்பிட்டு வர காமாலை நோய் குணமாகும். அத்துடன் மூட்டுக்கள், என்புகளை பலப்படுத்தும். சிறுநீரக செயற்பாடுகள் நீங்கும்.

மலக்கட்டு நீங்கி மலம் நன்கு வெளியேறும் . சத்திச் சாரணை இலையின் கல்சியம், பொஸ்பரஸ் ,மகனீசியம் , நார்ச்சத்து, நீர்ச்சத்து அதிகமாக உண்டு. தோலில் ஏற்படும் கரப்பான் நோய்களுக்கு சத்திச் சாரணை வேர் கடுக்காய்,சுக்கு மூன்றும் சம எடை கூட்டி 4 பங்கு நீர் விட்டு 1/4 பங்காக சுண்டக்காய்ச்சி 30-60 மில்லி அளவு காலை,மாலை சாப்பாட்டிற்கு முன்பு எடுத்து வர கரப்பான் நோய் படிப்படியாக குணமாகும்.

பிரசவித்த பெண்களுக்குக் கொடுக்கும் காயத்தில் மஞ்சள் ஒரு துண்டு, சத்திச்சாரணை வேர் 1 துண்டு, நற்சீரகம் 1/2 சிறங்கை என்பவற்றை எடுத்து தண்ணீர்விடாமல் அரைத்து நல்லெண்ணெய் சிறிது சிறிதாக சேர்த்து பசுந்தாக அரைத்து பனங்கட்டியுடன் கொட்டைப் பாக்களவு தினம் இருதடவை 3-5 நாட்களுக்கு கொடுக்கலாம்.

இதை பிரசவித்த பெண்களுக்கு இரண்டு, மூன்று குளிப்பு முடிந்த பின்னர் தான் கொடுக்க வேண்டும்.

இது கர்ப்பாசயக் கழிவுகளை நன்கு வெளியேற்றுவதுடன், தாய்ப்பாலையும் நன்கு சுரக்கச் செய்யும். சிறுநீரை நன்கு வெளியேற்றும். இரத்தத்தை சுத்திகரிக்கவும் உதவும். சத்திச்சாரணை மூலிகையை முதலில் சரியாக இனங்கண்டு கொள்ள வேண்டும்.

இதையே வெள்ளைச் சாரணை என்றும் குறிப்பிடுவர். அதில் வெள்ளைநிற சிறிய பூக்கள் காணப்படும்.ஆனால் ஊதா நிறப் பூக்களைக் கொண்டது. குப்பைச்சாரணை ஆகும். அதேபோல் சிலபேர் மூக்கரட்டை மூலிகையையும் சாரணை எனக் குறிப்பிடும். இரண்டும் வெவ்வேறு குடும்பத்தைச் சேர்ந்த மூலிகையாகும்.

சத்திச் சாரணைக்கீரையை சாப்பிட்டுவர ஈரல், சிறுநீரகம், இதயத்தைப் பலப்படுத்தக் கூடியது. அத்துடன் இதனுடைய வேரும், இலையும் இருமல் அல்லது சளியை வெளியேற்ற உதவும். சிறு நீரக நோயுள்ளவர்கள் சாரணை மூலிகையை தனியாக பயன்படுத்தலாம். சத்திச்சாரணை மூலிகை வேருக்கு கல்லீரலை பாதுகாக்கும் தன்மை உண்டு.

இதன் இலைக்கு வேருக்கும் குடற் புழுக்களை அகற்றும் தன்மையும் உண்டு.

இதன் கீரையை கடைந்து சாப்பிட்டு வர உடலில் நோய் எதிர்ப்பாற்றலை அதிகரிக்கக் கூடியது. சாதாரணமாக சத்திச் சாரணை இலைகள், மிளகு, கொத்தமல்லி, பெஞ்சீரகம், அளவான உப்பு ஆகியவற்றை சேர்த்து சூப் தயாரித்து காலை 10.00 மணி அளவில் எடுத்து வர உடலின் நிர்பீடனத்தை அதிகரிக்கச் செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர் 544





செய்துவிடுவாள்?"

"வேறொன்றும் செய்யமாட்டாள். உன்னைப் பூமியில் கழுத்து வரையில் புதைத்து யானையின் காலினால் இடறும்படி செய்வாள்!"

"ஐயோ! என்ன பயங்கரம்!"

"வேண்டாம் என்றால், நான் கூறுகிறபடி செய்வதாக ஒப்புக்கொள்."

"என்ன செய்ய வேண்டும்?"

"அதோ உன் அத்தான் கொண்டு வருகிறானே, அந்தப் படகில் ஏறிக்கொள். இரண்டு பேரும் நேரே இலங்கைக்குப் போய்விட வேண்டும். அங்கே போய் உன் இளவரசரை நினைத்து அழுது கொண்டிரு!"

"எதற்காக நான் இலங்கை போகவேண்டும்? இங்கேயே இருந்தால் உனக்கு என்ன?"

"ஆ! நீ போய் பழுவேட்டரையரிடம் என்னை பற்றிச் சொல்லிவிட்டால்! அவருக்கு என்ன இருந்தாலும் இளவரசர் பேரில் அபிமானம் உண்டு. என்னைப் பழிவாங்கப் பார்ப்பார். எனக்கு இந்த உலகில் இன்னும் கொஞ்சம் வேலை இருக்கிறது."

"அட பாவி! இளவரசரை நீ ஏன் கொன்றாய்! அதை யாவது சொல்லிவிடு!"

"சொன்னால் என்ன? நன்றாகச் சொல்லுகிறேன். இளவரசரும் அவருடைய தமக்கையும் சேர்ந்து, ஆதித்த கரிகாலரின் இராஜ்யத்தைப் பறிப்பதற்குச் சதி செய்தார்கள். ஆதித்த கரிகாலர் என்னுடைய எஜமானர்.

அவருடைய விரோதி என்னுடைய விரோதி. அதனால் தான் இளவரசரைக் கொன்றேன். தெரிந்ததா?"

"இந்த மகாபாவத்துக்கு நீ தண்டனை அனுபவிப்பாய்."

"அதைப்பற்றி நீ கவலைப் படாதே! நான் சொன்னபடி நீ செய்யப்போகிறாயா, இல்லையா?"

"செய்யாவிட்டால் வேறு வழி என்ன? அதோ படகு வருகிறது, போய் ஏறிக் கொள்கிறேன்."

"இதோ பார்! நன்றாய்க் கேட்டுக் கொள். படகில் ஏறியதும் நேரே கடலை நோக்கிச் செல்ல வேண்டும்.

கோடிக் கரைப் பக்கம் திரும்பினாயோ, உன் கதி அதோகதிதான்! இங்கேயே இருந்து நான் உங்கள் படகைப் பார்த்துக் கொண்டிருப்பேன். படகு கடலை அடைந்த பிறகுதான் இங்கிருந்து நகருவேன்."

"சரி சரி! இங்கேயே இரு! உன்னை நூறு நரிகள் பிடுங்கித் தின்னட்டும்!" வந்தியத்தேவன் செய்த சமிக்ஞையைப் பார்த்து விட்டுப் பூங்குழலி அங்கிருந்து விரைந்து போய்ப் படகில் ஏறிக் கொண்டாள்.

படகு மேலே சென்றது. வந்தியத்தேவன் அவளிடம் கூறிய படி அங்கேயே உட்கார்ந்திருந்தான்.

அரை நாழிகை சென்றது. படகு கால்வாயில் வெகு தூரம் வரை சென்று மறைந்தது.

திடீரென்று வந்தியத்தேவனுக்குப் பின்னால் 'ஹா ஹா ஹா' என்ற ஒரு பயங்கரச் சிரிப்பு கேட்டது. வந்தியத்தேவன் திடுக்கிட்டவன் போலப் பாசாங்கு செய்து, சட்டென்று எழுந்து நின்று பார்த்தான்.

மந்திரவாதி புதர்களுக்கு மத்தியில் எழுந்து நின்று பேய் சிரிப்பது போலப் பயங்கரமாய்ச் சிரித்தான்.

"ஐயோ! பிசாசு" என்று அலறிக்கொண்டு வந்தியத்தேவன் அங்கிருந்து ஓட்டம் பிடித்தான்.

(தொடரும்...)

"இளவரசரைக் கொன்றவன் நீதானா? சற்றுமுன் அவரைப் பார்க்கவேயில்லை என்று சொன்னாயே?"

"வேண்டுமென்றுதான் அப்படிச் சொன்னேன். இனி மேல் அப்படி உன்னிடம் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. நான் கூறியதை ஒப்புக் கொள்வாயா, மாட்டாயா?"

"மாட்டேன் என்று மறுத்தால்?"

"உடனே நந்தினி தேவியிடம் போய் நீ மந்திரவாதியைச் சேற்றில் அமுக்கிக் கொன்றதைக் கூறுவேன். நான் செய்த கொலைக்குச் சாட்சியம் இல்லை உன் கொலைக்குச் சாட்சியம் உண்டு"

"நந்தினி என்னை என்ன

## சிறுவர் அரங்கம்

## கவலைப்படாதே சகோதரா



காட்டில் பலசாலியான ஒரு சிங்கம் இருந்தது. ஆனால், அது எப்போது பார்த்தாலும் கவலைப்பட்டுக் கொண்டே இருந்தது.

"எனக்கு இவ்வளவு பலம் இருந்தும், இரும்பு போன்ற நகங்களும் பற்களும் இருந்தும் என்ன உபயோகம்? கேவலம், இந்தக் காட்டுச் சேவல் கூவுகிற சத்தம் என்னை நடுங்க வைக்கிறது. இப்படிப் பயந்து கொண்டே வாழ்வது ஒரு வாழ்க்கையா? என்று தன்னைத் தானே நொந்து கொண்டபடி இருந்தது.

அதே சமயம், அங்கே ஒரு யானை வந்தது. அது மிகவும் கவலையுடன் தன் காதுகளை முன்னும் பின்னும் அடித்துக் கொண்டே நகர்ந்தது.

அதைப்பார்த்த சிங்கம், "ஏய்.. ஜம்போ! உனக்கு என்ன கவலை? யாருமே உன்னை எதிர்த்து ஃபைட் பண்ணமாட்டார்களே! உன் உடலைப் பார்த்தாலே, எல்லா அனிமல்ஸீம் பயந்து ஓடுமே...எதற்காக நீ கவலையோடு இருக்கிறாய்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டது.

அதற்கு யானை, "இதோ என் காது பக்கத்தில் பறக்கும் குளவியைப் பார்த்தாயா? இது என் காதுக்குள் நுழைந்து கொட்டி விட்டால், அவ்வளவுதான்... என் உயிரே போய்விடும்! அதற்காகத்தான் இது காதுக்குள் போய்விடாதபடி, காதுகளை ஆட்டிக் கொண்டு கவலையோடு நடக்கிறேன்..." என்றது.

அது கேட்டு சிங்கம் யோசித்தது. "இவ்வளவு பெரிய உடம்பை வைத்து இருக்கும் யானை கவலைப்படாது என்று நினைத்தால், அதுகூடக் கவலைப்படுகிறதே! அப்படியானால், பூமியில் இருக்கும் எல்லா உயிர்களுக்கும் ஏதாவது ஒரு கவலை இருக்கத்தான் செய்யும் போலிருக்கிறது!

கவலைப்படுவதால் வாழ்க்கை ஒன்றும் நமக்கேற்ற மாதிரி மாறப்போவதில்லை.

அது மட்டுமல்லாமல் கவலைப்பட்டு, நம் கண்ணெதிரே இருக்கும் ஜாலியான விடயங்களைப் பார்த்து சந்தோஷமாகக் கூட வாழ முடியாமல் போய் விட்டதே!" என்று அது புரிந்து கொண்டது.

அன்றிலிருந்து அது கவலைப்படுவதை விட்டுவிட்டு, ஜாலியாக வாழத் தொடங்கியது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைச் சரியாக உணரும் பொழுது வீணான எண்ணங்கள் என்னும் விலங்கிலிருந்து விடுபட முடியும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சீதையை விடமாட்டேன் - இராவணன் ஐந்து ஊரும் தரேன் - துரியோதனன்

புராண இதிகாசங்கள் என்பன தனித்து தர்மத்தை மட்டும் உபதேசிப்பதாக யாரும் கருதிவிடக்கூடாது. மாறாக, மனித வாழ்வை வெற்றிகரமாகக் கொண்டு செல்வதற்கு எவை எவை முக்கியமோ அவை அனைத்தையும் புராண, இதிகாசங்கள் செப்பிநிற்கின்றன.

இந்தத் தத்துவங்கள் நேர்ப்பாதையிலும் நேர்மறைப் பாதையிலும் கருத்திடப்பட்டுள்ளன.

ஆம், இராமாயணம், மகாபாரதம் ஆகிய இரண்டு இதிகாசங்களும் உலகம் எவ்விதம் நடந்தாக வேண்டும் என்பதை சுட்டி நிற்கின்றன.

இதில் தவறான தீர்மானங்கள் எடுக்கப்படுமாயின், அதன் விளைவு அழிவாக இருக்கும் என்பதை இரண்டு இதிகாசங்களும் சுட்டி நிற்பது கவனிக்கத்தக்கது.

அதிலும் ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்கள் எடுக்கின்ற தீர்மானங்கள் மிகவும் முக்கியமானவை.

ஆம், இராவணன் மிகச்சிறந்த மன்னன். இறை பக்தியாளன். அவனின் ஆட்சியில் நாட்டு மக்கள் துன்பப்பட்டதான வரலாறு எதுவும் இல்லை.

இருந்தும் சீதையைக் கவர்ந்து சிறையில் அடைக்கின்ற பாவ காரியத்தை அவன் செய்தாகின்றான்.

இவ்வாறு சீதையைக் கவர்ந்து அசோக வனத்தில் சிறை வைத்தபோது, யுத்தம் உருவாகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது.

யுத்தத்தை தடுக்கின்ற தீர்மானத்தை எடுக்க வல்லவனாக இராவணனே விளங்குகின்றான்.

இங்குதான் கற்புடைத்தேவியை விட்டிடுமாறு கும்பகர்ணன் இராவணனுக்கு அறிவுரை கூறுகின்றான்.

இருந்தும் அவன் கேட்பதாக இல்லை. போர் மூண்டு விட்டது. நான் போர்க்களத்தில் இறந்து விட்டேன் என்ற செய்தியறிந்தேனும் சீதையை விட்டிடு என மீண்டும் வலியுறுத்துகிறான் கும்பகர்ணன்.

என் செய்வது, சீதையை விடுதலை செய்கின்ற தீர்மானத்தை எடுப்பதற்கு இராவணன் கிஞ்சித்தும் நினைத்தானில்லை.

விளைவு இலங்கை வேந்தன் இராவணனும் அவன் வம்சமும் போரில் அழிந்து போயின.

இதுபோலதான் மகாபாரதமும். நாட்டின் உரிமைக்குரிய பாண்டவர்கள் ஐந்தூர் தருக! அதுவும் இல்லையாயின் ஐந்து வீடேனும் தருக எனக் கேட்கின்றனர்.

ஐந்து வீட்டைக் கொடுக்கலாம் என்றொரு தீர்மானத்தை கௌரவர் தலைவன் துரியோதனன் எடுத்திருப்பானாயின், அவனே பாரதத்தை ஆட்சி செய்திருப்பான்.

என்ன செய்வது ஐந்து வீடும் தரமாட்டேன் என்கிறான் துரியோதனன்.

விளைவு குருசேத்திரத்தில் நடக்கிறது. கௌரவர் தலைவன் துரியோதனனின் உடன்பிறப்புகள் கொல்லப்படுகின்றனர்.

உற்ற நண்பன் போர்க்களத்தில் மாண்டு போனான். அவனும் பாண்டவரின் மூத்தவன் என அறிந்து புழுங்கிப்போன துரியோதனன் ஈற்றில் தானும் மாண்டு போனான்.

ஆகையால், ஆக்கத்தையும் – அழிவையும் வாழ்வையும் – இறப்பையும் நாம் எடுக்கும் தீர்மானங்களே வழங்குகின்றன என்பதால், எடுக்கின்ற தீர்மானங்கள் சரியானதாக இருப்பது மிக மிக முக்கியமானது என்பது உணர்தற்குரியது.

# பொருளாதார நெருக்கடிக்கு நல்லாட்சி அரசே பொறுப்பு

## நாமல் எம்.பி குற்றச்சாட்டு

பொருளாதார நெருக்கடிக்கு நல்லாட்சி அரசாங்கமே பொறுப்புக் கூற வேண்டும். நபர்களை அடிப்படையாகக் கொண்டு அரசியல் தீர்மானத்தை எடுக்கப் போவதில்லை.கட்சியின் கொள்கைக்கு முன்னுரிமை வழங்கி உறுதியான தீர்மானத்தை எடுப்போம் எனப் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (28) பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

2018 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அரசியலில் பாரிய சவால்களை எதிர்கொண்டோம்.கொவிட் பெருந்தொற்று தாக்கத்தின் போது நாட்டு மக்களின் உயிரா ? அல்லது பொருளாதாரமா ? என்ற தீர்க்கமான தீர்மானத்தை எடுக்க வேண்டியிருந்தது.பொருளாதாரத்தைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம் மக்களின் உயிரைப் பாதுகாக்க வேண்டும் என்று தீர்மானித்தோம். அதற்கமைய கொவிட் பெருந்தொற்றில் இருந்து நாட்டு மக்களைப் பாதுகாத்தோம்.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் பெற்றுக் கொண்ட கடன்கள் சமூக கட்டமைப்பில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. எமது அரசாங்கத்தின் அபிவிருத்தி செயற்திட்டங்களையே தனியார் மயப்படுத்த தற்போதைய அரசாங்கம் முயற்சிக்கிறது.

பொருளாதார நெருக்கடிக்கு நல்லாட்சி அரசாங்கமே பொறுப்புக் கூற வேண்டும்.2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் எந்த புதிய அபிவிருத்தித் திட்டங்களும் அறிமுகப் படுத்தப்படவில்லை. மாறாக எமது அரசாங்கத்தின் அபிவிருத்தி கருத்திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டன.ஆகவே பொருளாதாரக் கொள்கையில் இரு மாறுப்பட்ட நிலைப்பாடுகள் காணப் படுகின்றன.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளர் குறித்த உத்தியோகபூர்வ அறிவிப்பை இவ்வாரம் வெளியிடுவோம்.நபர்களை அடிப்படையாகக் கொண்டு அரசியல் தீர்மானத்தை எடுக்கப் போவ தில்லை.கட்சியின் கொள்கைக்கு முன்னுரிமை வழங்கி உறுதியான தீர்மானத்தை எடுப்போம் என்றார். (ந-7)

## தேர்தல் வன்முறைகளை கண்காணிக்க விஷேட மையம்

### தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர்

*(கொழும்பு)*

தேர்தல் தொடர்பான வன்முறைகள் மற்றும் தேர்தல் சட்ட மீறல்களைக் கண்காணிப்பதற்காக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் (SDIG) கீழ் செயற்பாட்டு மையம் ஒன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான ஆயத்தங்களில் முதன்மையானதாக இருக்கும் என தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

முதலாவது மையம் அடுத்த வாரத்திற்குள் கொழும்பில் அமைக்கப் படும் எனவும் அதனைத் தொடர்ந்து அனைத்து மாவட்டங்களிலும் தேர்தல் வன்முறைகள் மற்றும் தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளை தெரிவிப்பதற்கான மையங்கள் அமைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளை மேற்பார்வையிட சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஏ.ஜே.கரவிட்ட ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளார்.

மாவட்டங்களில் ஒருங்கிணைப்புக்கு மூத்த பொலிஸ் கண்காணிப்பாளர் ஒருவர் நியமிக்கப் படுவார்.

இதனைத் தொடர்ந்து வாட்ஸ்அப், தொலைநகல் உள்ளிட்ட தொலைபேசி எண்கள் அறிவிக்கப்படும். இது புகார் மற்றும் தகவல்களை வழங்க உதவும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, வேட்புமனுத் தினத்திற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் அடுத்த முன்னுரிமையாக இருக்கும்.

இந்த விடயம் தொடர்பில் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மற்றும் மூன்று மூத்த பொலிஸ் கண்காணிப்பாளர்களுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன.

மேலும் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்ய அறிவுறுத்தல்கள் வெளியிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸ் மா அதிபர் இல்லாத போதிலும் அது எந்தத் தடையையும் ஏற்படுத்தாது எனத் தான் நம்புவதாக அவர் மேலும் தெரிவித்தார். (ந-7)

## உபகட்டமைப்புக்களை அமைப்பதற்கு முடிவு

### நேற்றைய கூட்டத்தில் தீர்மானம்

தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பின் விசேட கூட்டம் யாழ் நகரிலுள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று நடைபெற்ற போது பொதுக் கட்டமைப்பின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்ந்து முக்கிய சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

இச் சந்திப்புத் தொடர்பாக பொதுக் கட்டமைப்பின் உறுப்பினரும் அரசியல் ஆய்வாளருமான நிலாந்தன் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டார். இதன் போது அவர் தெரிவித்ததாவது,

தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளுக்கும் தமிழ் மக்கள் பொதுச் சபைக்கும் இடையில் உருவாக்கப்பட்டுள்ள தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பின் முதலாவது கூட்டம் நேற்று நடைபெற்றது.

இதன் போது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துவது குறித்தான பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டு அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் சில தீர்மானங்களை எடுத்திருக்கிறோம்.

குறிப்பாக வேட்பாளர் யார் என்பதை தெரிவதற்கும், தேர்தல் அறிக்கையைத் தீர்மானிப்பதற்கும், கட்சிச் சின்னத்தை தீர்மானிப்பதற்குமான உப கட்டமைப்புக்கள் நிதி மற்றும் பரப்புரை நடவடிக்கைகளுக்கான உபகட்டமைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் உரிய கட்டமைப்புக்களால் உரிய நேரத்தில் அந்தந்த விடயங்கள் தொடர்பில் அறிவிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ந-7)

## சட்டவிரோத சிகரெட் கடத்தல்

### கட்டுநாயக்கவில் சீனப்பெண் கைது

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சீனப் பெண்ணொருவர் சுங்க திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட சட்டவிரோதமான சிகரெட்டுகளை நாட்டிற்குள் கொண்டு வந்த நிலையிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண் நேற்றிரவு மலேசியாவில் இருந்து இலங்கை வந்த போது கைது செய்யப்பட்டதாக சுங்க ஊடகப் பேச்சாளர் சீவலி அருக்கொட தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண்ணிடமிருந்து 29 ஆயிரத்து 200 சிகரெட்டுகளை சுங்கத்தினர் கைப்பற்றியுள்ளதாகவும் அவை சுமார் 43 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் பெறுமதி எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பதவி விலகல்



(கொழும்பு)
வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் சி.பி.அத்தலுவாகே பதவி விலகியுள்ளார்.

இது தொடர்பான பதவி விலகல் கடிதம் ஜனாதிபதியின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தனவுக்கு இது தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அத்தலுவாகே தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிகள் தொடர்பில் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளரின் தன்னிச்சையான தலையீடு மற்றும் தேவையற்ற செல்வாக்கு காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அத்தலுவாகே குறிப்பிட்டுள்ளார். (நி)

# 'கள்' விற்பனை நிலையம் அமைக்க மக்கள் எதிர்ப்பு

(அக்கராயன்)
கிளிநொச்சி பூநகரி சின்னப்பல்லவராயன்கட்டுச் சந்தியில் புதிதாக கள் விற்பனை நிலையம் அமைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வரும் நிலையில் குறித்த முயற்சிகளுக்கு சின்னப் பல்லவராயன்கட்டு கிராம மக்கள் கடும் எதிர்ப்பினை வெளியிட்டுள்ளனர்.

ஏற்கனவே சின்னப் பல்லவராயன் கட்டு கிராமத்தில் கசிப்பு உற்பத்தியினால் குடும்ப வன்முறைகள் அதிகரித்து காணப்படுகின்றன.

இந் நிலை யில் பூநகரி பனை தென்னை வள சங்கத்தினால் சின்னப் பல்லவராயன்கட்டுச் சந்தியில் கள் விற்பனை நிலையம் அமைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வரும் நிலையில் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள கிராம மக்கள் குறித்த கள் விற்பனை நிலையத்தினை மக்கள் நடமாட்டம் குறைந்த வேறொரு இடத்தில் இயக்க வேண்டும்.

சந்தியில் கள் விற்பனை நிலையம் இயங்கினால் இரவு வேளைகளில் வேலைக்கு சென்று திரும்பும் பெண்களுக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் பாதுகாப்பற்ற நிலைமைகள் உருவாகும் என்பதனால் சந்தியில் கள் விற் பனை நிலையம் திறப்பதற் கான எதிர்ப்பை வெளியிடுவதாக தெரிவித்தனர். (நி-350)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 220 | 300 | 160-220 | 300 |
| உருளைக்கிழங்கு | 220 | 250 | 220 | 240 | 280 |
| பச்சைமிளகாய் | 400 | 450 | 550 | 400-500 | 600 |
| தக்காளி | 400 | 300 | 300 | 220 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 180 | 120-150 | 200 |
| கோவா | 400 | 300 | 450 | 300 | 500 |
| கரட் | 450 | 450 | 500 | 350 | 500 |
| பூசணி | 180 | 180 | 220 | 150 | 250 |
| புடோல் | 150 | 150 | 180 | 200 | 200 |
| வாழைக்காய் | 160 | 200 | 200 | 220 | 300 |
| சின்ன வெங்காயம் | 280 | 300 | 400 | 250-500 | 350 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 250 | 220 | 250 |
| பாகற்காய் | 400 | 500 | 450 | 450 | 600 |
| வெண்டக்காய் | 200 | 250 | 200 | 250 | 300 |
| கருணைக் கிழங்கு | 200 | 150 | 280 | 150 | 200 |
| பயற்றங்காய் | 300 | 200 | 120 | 150-220 | 200 |
| லீக்ஸ் | 350 | 500 | 500 | 300 | 600 |
| பீற்றூட் | 400 | 350 | 400 | 450 | 500 |
| கறிமிளகாய் | 800 | 900 | 1000 | 400 | 1200 |
| முருங்கைக்காய் | 150 | 200 | 200 | 60-80 | 200 |
| போஞ்சி | 800 | 600 | 800 | 400 | 800 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 250 | -- | 250 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 50 | 60 | 100 |
| தேசிக்காய் | 400 | 800 | 600 | 500-650 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 80 | 60-120 | 80-120 |
| இராசவள்ளி | 700 | 500 | 650 | -- | 600 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 400 | -- | 500 |
| முள்ளங்கி | 100 | 120 | 150 | 150 | 100 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 50 | 40 | 80 | 100 | 80 |
| ஈரப்பலா | 100 | 80 | 80 | 100 | 80 |

# இன்று ஒரு தகவல் 197



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## ஆகிரி ராகம்

ஒரு நாள் நாரதர் ஒரு பாட்டு பாடிக் கொண்டு வந்தார். நாரதர் என்றால் ஏதாவது சிக்கலை உண்டு செய்வது தானே வழக்கம்? அவர் ஏன் பாட்டுப் பாடிக் கொண்டு வந்தார்? என்று கேட்கிறீர்களா?

பொறுமையா கேளுங்கள் இதுலேயும் ஒரு சிக்கல் வருகிறது. பொதுவாக நாரதர் மற்றவர்களைத்தான் சிக்கல்லே மாட்டிவிடுவது வழக்கம். இந்த விடயத்திலே அவரே ஒரு சிக்கல்லே மாட்டிக்கொண்டார். அதுக்கப்புறம் ஒரு வழியா தப்பித்து வந்தார். அந்த கதையைக் கேளுங்கள்.

நாரதர் பாடிக்கொண்டு வந்தார் என்று சொன்னேன் இல்லையா? அவர் ஆகிரி ராகத்துலே அந்தப் பாட்டைப் பாடிக் கொண்டு வந்தார்.

இந்த ராகத்தை நாம சரியாகத்தான் பாடுகிறோமா? என்று சந்தேகம் அவருக்கு!

உடனே சரஸ்வதியிடம் போய்க் கேட்டார். நான் பாடுகின்ற இந்த ராகம் சரியாக இருக்கிறதா என்று. அதற்கு சரஸ்வதி தேவி என்ன சொன்னார்கள் தெரியுமா? நீ பாடுவது சரியா இல்லையா என்பது ஆஞ்சநேயரிடம் கேட்டு தெரிந்து கொள் என்று சொன்னார்கள்.

நாரதருக்கு என்னமோ ஒரு மாதிரி அகிவிட்டது நாம எங்கே ஆஞ்சநேயர் எங்கே அவரிடம் போய் கேட்டு தெரிந்து கொள்கின்ற அளவிற்கு நிலமை ஆகிவிட்டது என்று நினைத்தார். இருந்தாலும் சரஸ்வதி சொன்னதற்கு பிறகு சும்மா இருக்க முடியுமா? நேராகப் போனார் அஞ்சநேயரிடம் பாடிக் காட்டினார். இது சரியா என்று கேட்டார். அஞ்சநேயர் நாரதரை அழைத்துக் கொண்டு போய் ஒரு மலையிலே நிறுத்தினார். இப்போது பாடு அது சரியாக இருந்தால் இந்த மலை உருக வேண்டும் என்று சொன்னார்.

நாரதர் பாடினார். மலை உருகவில்லை! சரி இப்போது நான் பாடுகிறேன் பார் என்று சொல்லி விட்டு ஆஞ்சநேயர் பாடினார். மலை உருக ஆரம்பித்து விட்டது. நான் நின்று கொண்டிருந்த மலை உருகுதே என்று சத்தம் போட்டார் நாரதர். ஆஞ்சநேயர் பாதியிலே பாட்டை நிறுத்தினார். உடனே உருகுவதும் நின்று போய் விட்டது. உருகிய மலை உறைய ஆரம்பித்து விட்டது.

நாரதருடைய கால் பாறையிலே மாட்டிக் கொண்டது. எடுக்க முடியவில்லை. மறுபடியும் சத்தம் போட்டார். ஆஞ்சநேயர் மறுபடியும் பாடி நாரதரைக் காப்பாற்றினார். நாரதர் தப்பித்தோம் பிழைத்தோம் என்று எட்டத்துலே வந்து நின்று கொண்டார். அவருடைய கோபம் குறையவில்லை. அதனால் ஒரு சாபம் கொடுத்து விட்டார். எப்படித் தெரியுமா? இந்த ஆகிரி ராகத்தை யார் பாடினாலும் அவருக்கு சோறு கிடைக்கக்கூடாது? என்று! அதனாலே இந்த ராகத்தை இப்பவும் பாடுவறதற்கு பயப்படுபவர்கள் உண்டு.

ஒரு சங்கீத வித்துவான் இதை சோதித்துப்பார்க்க வேண்டும் என்று புறப்பட்டார். தயிர் சாதத்தை கட்டி வளைந்திருந்த ஒரு முங்கிலிலே சோற்று மூட்டையைக் கட்டினார். கீழே உட்கார்ந்தார். ஆகிரி ராகம் பாட ஆரம்பித்தார். பாடி முடித்து விட்டு கண்ணை திறந்து பார்த்தார் சோற்று மூட்டையைக் காணவில்லை.

என்ன ஆச்சு தெரியுமா? சூரிய ஒளி பட்பட வளைந்திருந்த மூங்கில் நிமிர்ந்துவிட்டது! கட்டுச் சோறு கைக்கு எட்டாத தூரத்துக்கு போய் விட்டது. சோறு கைக்கும் எட்டவில்லை வாய்க்கும் எட்டவில்லை! பசி வயிற்றை கிள்ளுது என்ன செய்வது என்று யோசித்தார்.

ஒரு பெரிய செல்வந்தர். வீட்டுக்குப் போனார் பசிக்கிறது என்று சொன்னார். உடனே இவரை உட்கார வைத்து இலை போட்டார்கள். சோறு வைத்தார்கள். பசியோடு அதை பார்த்ததும் இவருக்கு சந்தோசம். ஆகிரியாலே இனிமேல் எதுவும் செய்ய முடியாது! அவ்வளவு தான்! என்று சொல்லிக் கொண்டு சோற்றை கையிலே எடுத்தார். அதுக்குள்ளே இரண்டு பேர் வந்தார்கள் அவரை இழுத்துக்கிட்டுப்போய் வெளியே தள்ளி விட்டார்களாம். என்ன விடயம் தெரியுமா? அந்த செல்வந்தருடைய மனைவி பேர் ஆகிரியாம்! ஆகிரி ராகம் பாடினால் சோறு கிடைக்காது என்பதற்காக இப்படியெல்லாம் கதைகள் உண்டு.

அது உண்மை என்ற நினைப்பில் பாடுவதற்கு பயப்படுகிறவர்களும் உண்டு. ஆகிரி ராகத்தை வைகறைப் பொழுதிலே சுத்தமாக வேறு ஸ்வரம் எதுவும் கலக்காமல் பாடினால் சோறு கிடைக்காது என்பது ஒரு நம்பிக்கை அவ்வளவு தான். இவ்வளவு எல்லாம் இருந்தும் எனக்கு தெரிஞ்ச ஒரு சங்கீத வித்துவான் தினமும் ஆகிரி ராகம் பாடிக் கொண்டே இருப்பார். அதுவும் வீட்டுக்குள்ளேயே அதிகாலை நேரத்திலே பாடுவார். அவரை ஒரு நாள் பார்த்தேன். உங்களுக்கு மிகவும் தைரியம் தான் சார்! என்றேன் . ஏன் அப்படி சொல்லுகிறீர்கள்? என்றார்.

ஆகிரி ராகத்தை அவ்வளவு துணிச்சலாக உங்க வீட்டிலேயே பாடுகிறீர்களே! என்றேன். அவர் பரிதாபமாக என்னை நிமிர்ந்து பார்த்தார். அப்படி இல்லை சார்! நான் எந்த ராகம் பாடினாலும் எங்கள் வீட்டிலே சோறு கிடைக்காது சார்! அதனாலே தான் தைரியமாக அந்த ராகத்தை பாடுகிறேன்! என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 42 இந்திய...

இதில் ஜூலை 1ஆம் திகதி 4 நாட்டுப் படகுகளில் எல்லை தாண்டிய 25 மீனவர்களும், ஜூன் 16 ஆம் திகதி ஒரு படகில் எல்லை தாண்டிய 4 மீனவர்களும், ஜூலை 11ஆம் திகதி 3 படகுகளில் எல்லை தாண்டிய 13 இந்திய மீனவர்களும் என மொத்தம் 42 இந்திய மீனவர்களின்வழக்குகள்விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

இதேவேளை, ஜூன் 22ஆம் திகதி கைதான மேலும் 22 இந்திய மீனவர்களின் வழக்கு நாளை செவ்வாய்க்கிழமை ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு வரவுள்ளது. யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தற்போது 64 இந்திய மீனவர்கள் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## வாக்குகள்...

இலங்கையின் அனைத்து சமூகங்களினதும் ஆதரவுடன் அரசாங்கத்தை அமைப்பதே தேசிய மக்கள் முன்னணியின் தூரநோக்காகும். இலங்கையை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடனேயே நாம் ஆட்சிக்கு வருவோம்.

அதற்காகத் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் ஆதரவைப் பெற்ற ஐக்கிய அரசாங்கத்தை அமைக்க வேண்டும்.

சிங்கள வாக்காளர்களின் வாக்குகளுடன் தேர்தலை வெல்வது மாத்திரம் எங்களிற்குப் போதுமானதல்ல. வெற்றி பெறுவதற்கு சிங்கள மக்களின் வாக்குகள் போதுமானவை ஆனால் எங்களின் நோக்கம் அதுவல்ல எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ரணில் விக்கிரமசிங்க நீதிமன்ற தீர்ப்புகளிற்கு எதிராகச் செயற்படுகின்றார். பொலிஸ்மா அதிபர் விவகாரம் மாத்திரமே அவரை ஜனாதிபதிப் பதவியிலிருந்து தகுதிநீக்கம் செய்வதற்குப் போதுமானது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-7)

## ஜனாதிபதித்...

முன்னாள் அமைச்சருமான ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"யாராலும் ஏற்க முடியாத சவாலை ஏற்றுச் செய்து காட்டியவர் எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்க. அப்படிப்பட்டவர் தேர்தலில் போட்டியிடுவாரா?, தேர்தலை நடத்துவாரா? என்று சிலர் கேட்டார்கள்.

இந்நிலையில், ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி தேர்தல்கள் ஆணைக்குழுவால் அறிவிக்கப்பட்டவுடனேயே அவர் முதலாவது வேட்பாளராகக் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளார். சுயாதீன வேட்பாளராக - பொது வேட்பாளராகவே அவர் போட்டியிடுகின்றார்.

திட்டமிட்ட திகதியில் அதாவது செப்ரெம்பர் 21ஆம் திகதியன்று ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும். சுதந்திரமான - நீதியான தேர்தலை நடத்துவதே ஜனாதிபதி ரணிலின் பிரதான நோக்கம்.

அவரால் மாத்திரம்தான் இந்த நாட்டை முன்னேற்ற முடியும் என்பதை அவர் குறுகிய காலத்தில் நிரூபித்துக் காட்டியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு வென்று மிகுதிப் பிரச்சினைகளை அவர் தீர்த்து வைப்பார். இந்தப் பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவர்தான் சரியானவர் என்று இப்போது எல்லோரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல்களில் ரணிலுக்கு வாக்களிக்காதவர்கள் இந்தத் தேர்தலில் அவரை ஆதரிப்பதற்காகச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து நிற்கின்றார்கள். எனவே, இந்தத் தேர்தலில் ரணிலின் வெற்றி நிச்சயம்." என்றார். (ந-7)

## மாடுகளை...

ருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் சந்தேகத்துக்கு இடமான வாகனத்தை வவுனியா ஹொரவப்பொத்தான வீதி 6ஆம்கட்டைப்பகுதியில் வைத்து வழிமறித்த விசேட அதிரடிப் படையினர் அந்த வாகனத்தில் சட்டவிரோதமாகக் கொண்டு செல்லப்பட்ட 15 மாடுகளைக் கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன் வாகனத்தில் பயணம் செய்த காட்டகஸ்கிரியப் பகுதியை சேர்ந்த மூன்று சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளதுடன் வாகனத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை விசாரணையின் பின்னர், வவுனியாப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதுடன் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ந-7)

## பெரமுன...

மேலும் கருத்து வெளியிடுகையில், நான் மகிந்த சிந்தனையால் ஈர்க்கப்பட்டவன்.

எனது பொருளாதாரச் சிந்தனைகள் அனைத்தும் மகிந்த சிந்தனையினை அடிப்படையாகக் கொண்டமைந்தவை.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கோரும் பட்சத்தில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட எந்த நேரமும் நான் தயாராகவேயுள்ளேன். அதேவேளை வேறு எந்தக் கட்சியிலும் வேட்பாளராக களம் காண எனக்கு விருப்பம் இல்லை என்றார்.

இதேவேளை ஜனாதிபதித் தேர்தலில் பெரமுனவின் இறுதி நிலைப்பாடு இன்று வெளியாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## கட...

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சூரிய பண்டாரவிற்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதை அடுத்து, நிர்வாக ரீதியான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டது.

விசாரணைக்கு ஏதுவாக உடனடியாக அமுலுக்கு வரும் வகையில், இரண்டுபொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எழுதுமட்டுவாழ் பொலிஸ் சோதனை சாவடியில், கடந்த வாரம் இரண்டுபொலிஸ் உத்தியோகத்தர்கள் டிப்பர் சாரதிகளிடம் இலஞ்சம் பெற்றதாக யாழ் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சூரிய பண்டாரவிற்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற நிலையில், அது தொடர்பிலான விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டு, லஞ்சம் வாங்கியதாகக் குற்றம் சாட்டப்பட்ட இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களும் இடமாற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## பண்டத்...

எரிந்துநாசமாகின. குறித்த சம்பவம் தொடர்பில் பண்டத்தரிப்புப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

## உயர் நீதிமன்...

பாதக் கருதலாமா? என்பது குறித்து தெளிவான சட்டவிதிகள் இல்லாததால் இதுகுறித்து உயர்நீதிமன்றத்தின் தெளிவுபடுத்தலை ஜனாதிபதி கோரவுள்ளார்.

மேலும் அரசியலமைப்பின் 41 சி மற்றும் 41ஜி குறித்து தெளிவுபடுத்தல்களை முன்வைக்குமாறு நீதிமன்றத்தை கோரவுள்ளதோடு பொலிஸ்மா அதிபர் பதவி தொடர்பான பிரச்சினைகளுக்கு சபாநாயகரும் பிரதம நீதியரசரும் கலந்துரையாடித் தீர்வு காண வேண்டும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த வாரத்திற்குள் கலந்துரையாடல்களை நடத்த வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-7)


மஹஜன சம்பத
திகதி 2024.07.28
சீட்டிழுப்பு இலக்கம் 5548
C 6 0 0 6 8 6
அத சம்பத C 0 6 8 6
சீட்டிழுப்பு இலக்கம் 123

தன நிதானய
திகதி 2024.07.28
சீட்டிழுப்பு இலக்கம் - 1578
F 08 19 48 71 F
32833

மெகா பவர்
திகதி 28/07/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1896
B 13 04 24 47 64
42492

லக்கி 7 VIP
திகதி 2024.07.28
சீட்டிழுப்பு இலக்கம் 0374
U 5 4 1 1 5 8 U

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3790
சீட்டிழுப்பு திகதி 28.07.2024
W 11 43 56 66 W
61380

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.07.28
சீட்டிழுப்பு இலக்கம் 0857
கன்னி 12 18 19 24 கன்னி
32123 25

உத்தியோகபூர்வ முடிவுகள்
28.07.2024 வெற்றி வாரம் 256
C 6 6 9 8 1 6
ரூ.22,494,740.00
54181

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2522 வர்ணம் ஆரஞ்சு நிறம்
சீட்டிழுப்பு திகதி 28.07.2024 தினம் ஞாயிறு
35 42 46 67 T
ரூ.101,359,904,00

சனிதா
2024.07.28 வெற்றி வாரம் 4683
20 43 47 48 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.66,607,835.20
77045

சசிரி
வெற்றி வாரம் 508
சீட்டிழுப்பு திகதி 2024.07.28
கபிலம்
16 22 36
05
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,124,520/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4234 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2024.07.28 தினம் ஞாயிற்றுக்கிழமை
12 26 32 61 கன்னி
ரூ. 4,043,667.60
681983

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Y 34 24 30 69 70
1698 மஞ்சள் 28.07.2024 ஞாயிறு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 535,713,666.20

அட கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2348
சீட்டிழுப்பு திகதி : 2024.07.28
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,130,185.60
34 43 72 75 C
249913


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-0882)

076 825 7716 (ஆகாஸ்)


## மணப்பெண் தேவை

- சங்கானை, இந்து, கௌரவ குலம், 1992, விசாகம், BA(Hons), Accountant, UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- சுன்னாகம், இந்து, கௌரவ குலம், 1996, மிருகசீரிடம், BEng, Software Engineer, Australia மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- பளை, இந்து, கௌரவ குலம், 1988, அனுசம், Inventory officer, Canada மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- தெல்லிப்பளை, இந்து, கௌரவ குலம், 1996, சித்திரை, Post graduate in Management, Newzealand Government officer, Newzealand மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- மயிலிட்டி, இந்து, கௌரவ குலம், 1981, அத்தம், Accountant, USA மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- யாழ், இந்து, கௌரவ குலம், 1983, பரணி, Sales Assistant, UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- கோப்பாய், இந்து, கௌரவ குலம், 1988, பூரட்டாதி, MBA, Canada மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- யாழ், இந்து, கௌரவ குலம், 1980, உத்திரட்டாதி, IT Degree, Accountant மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- தெல்லிப்பளை, இந்து, கௌரவ குலம், 1989, அனுசம், Graduate, Human Resource Analyst, USA மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

(203)

S.Sharma J.P
Astrologer
- 077 539 3728
- 077 803 8193


## விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

1%
- Visit visa
- Student visa
- Fixed & saving
- லட்சத்திற்கு 1000 மட்டுமே

(187)

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்

தொடர்பு : 075 033 6759


## அந்தியேட்டி கிரியை திகதி மாற்றம்



கடந்த 29.06.2024 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர்
### சிவராசா சகுந்தலாதேவி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகளும், சபிண்டீகரண நிகழ்வும் இன்று திங்கட்கிழமை (29.07.2024) நடைபெற இருந்தது. ஆனால் தவிர்க்க முடியாத காரணத்தால் அந் நிகழ்வுகள் பிற்போடப்பட்டுள்ளதையும் நடைபெறவிருக்கும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்பதனையும் வரவழைக்கப்பட்டோர்க்கும், சம்பந்தப்பட்டவர்களிற்கும் மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

சந்தையடி,
உடுப்பிட்டி.
(C-881)
தகவல் :
குடும்பத்தினர்


வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127



## வங்கி மீதி வசதி (Show money)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு: (182)

074 17 37 684

## வெளிநாடுகளுக்கான துரித பொதிகள்

சகல நாடுகளுக்கும் விசேட விலைக் கழிவு
11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு

| | | | |
|---|---|---|---|
| UK | - 1300/= | French | - 1990/= |
| Canada | - 2400/= | Germany | - 1990/= |
| Australia | - 2300/= | USA | - 2400/= |

மற்ற நாடுகளுக்கும் விசேட சலுகை (204)

திருமுருகன் பொதிகள் சேவை
321, K.K.S Road, Jaffna. | 208, Galle Road, colombo-6.
077 755 4528


## வீடு வாடகைக்கு தேவை

2 பேர் உள்ள சிறிய குடும்பத்திற்கு பூதர்மடம், நீர்வேலி கரந்தன் மாசிவன் இராச வீதி, கோண்டாவில், உரும்பிராய் அண்மித்த பகுதியில் வீடு வாடகைக்கு தேவை. (1566)

077 198 7830
077 538 1642


## Physical and Digital (Zoom) English classes


30 நாட்களில் ஆங்கிலம் கற்போம் - Adult only
(இலகுவான தமிழ்மொழி மூலம்)

1. Grade 1 - A/L (Term Exams நடத்தப்படும்)
2. Grammar and Spoken English
3. Elocution Classes Beginner - Grade 8

Course இல் இணைவதற்கு இப்போதே தொடர்பு கொள்ளவும். (197)

NALTC
134, Adiyapatham Road, Thirunelvely, Jaffna.
077 038 5584


## 3ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
22
05
1933

உதிர்வு
01
08
2021

### அமரர் கார்த்திகேசு குணரத்தினம்

Retired Asst. Director of Agriculture, North - East province, Srilanka. National Consultant UN/FAO, Srilanka
(முன்னாள் தேசிய கரப்பந்தாட்ட வீரர் – இலங்கை, சமூக சேவையாளர்)

திதி : 29.07.2024

எங்களின் இதய தெய்வமே!
மூன்றாண்டுகள் சென்றாலும் – உம்
நினைவுகள் எம்மை விட்டு நீங்கவில்லை
எங்கள் நெஞ்சமதில் நிறைந்திருக்கும்
அன்புத் தெய்வத்தின் பொற்பாதத்தில்
மலர்தூவி அஞ்சலி செய்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

(178)

சிட்னி,
அவுஸ்திரேலியா.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்


## Care Giver - பராமரிப்பாளர்

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)

CIMS College
49A, Chapel Street, Jaffna.
(C-0880)

College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

## Visitor Visa/Tourist Visa/Student Visa/Settlement Visa

UK, Canada, USA, Norway, France, Australia மற்றும் சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் Online மூலம் செய்து தரப்படும். மேலும்

- Online Police Clearance
- Online booking an appointment
- விசா தொடர்பான ஆலோசனைகள் மற்றும் கடிதங்கள்

A/L படித்த பெண் பணியாளர்கள் தேவை.
Salary - 35000.00 (197)

Online Visa Advisor
Jaffna, Mannar, Colombo
070 375 0002

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0880)

## அனைத்து நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள்

குறைந்த விலையில்

- Air Ticket Date Change
- Travel Insurance
- Online Visa Appoinments
- Travel Itinerary
- Sri Lanka Visa Extension
- All Country Visa Services

(C-0880)

உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்

கொழும்பு | மட்டக்களப்பு | திருகோணமலை | கிளிநொச்சி
புதுக்குடியிருப்பு | கொடிகாமம் | சாவகச்சேரி | புத்தூர்
யாழ்ப்பாணம் | நாச்சிமார் கோவிலடி | பண்டத்தரிப்பு
சுன்னாகம் | மானிப்பாய் | சங்கானை | கோப்பாய்
நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை

V2 TRAVELS 0768226240 0768226241


## பதவி வெற்றிடங்கள்
## பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்

758 ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்கும் பாதுகாப்பு நிறுவனங்களுக்கு 50 வெற்றிடங்கள் உள்ளன. இணைய விரும்புவோர் பின்வரும் ஆவணங்களுடன் நேரில் எதிர்வரும் 30.07.2024 செவ்வாய்க்கிழமை தொடக்கம் 03.08.2024 சனிக்கிழமை வரை நேர்முகத் தேர்விற்கு சமுகமளிக்கவும்.

1. தேசிய அடையாள அட்டையின் பிரதி
2. கல்விச் சான்றிதழ்களின் பிரதி
3. பிறப்புச்சான்றிதழின் பிரதி
4. கிராம சேவையாளரின் நற்சான்றிதழ்

(C-872)

குறிப்பு - சம்பள நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட சம்பளம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் நம்பிக்கை நிதியம் என்பன வழங்கப்படும்.

தொ.பேசி இல :- 076 788 9083

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாப [illegible] எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.